தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம்
தலைமையகம் குமரிமாவட்டம்
அரசு பதிவெண் 36/2021

நிறுவனத் தலைவர்
பனைமரத் தாரகை
திருமதி.E.L.பிரதிஜீன்

தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம் தொடங்கப்பட்ட வருடம் 2013-ம் ஆண்டு பனைமரத்தாரகை திருமதி.E.L.பிரதிஜீன் அவாகளால் துவங்கப்பட்டது. தமிழக மாநிலமரம் பனைமரம் பனைமரம் பாதுகாக்கப்பட வேண்டும் அழியக்கூடாது பனைமரத்தை வெட்டக்கூடாது பனை பொருட்களை மக்கள் பயன்படுத்த வேண்டும். நிலத்தடி நீர் ஆதாரத்தை சேமிக்கும் அரண் அடிமுதல் நுனிவரை பலனை தருகிறது. பாரம்பரியத்தோடு பயணித்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியது பனைமரம். குமரிமக்களின் வாழ்க்கை முறைகள் இப்பனையைச் சார்ந்தே இருந்தது என்பதை யாராலும் மறுக்கவே முடியாது. இயற்கை சார்ந்த விழிப்புணர்வு இந்த இயக்கத்தின் நோக்கமானது பனைசார்ந்த விழிப்புணர்வோடு மட்டுமல்லாமல் சமூக சேவைகளை மக்களுக்கு சென்று சேர வேண்டும் என்கிற நோக்கத்தோடு இவ்வியக்கம் துவங்கப்பட்டது. முதன்முதலாக அங்கன்வாடி பள்ளி மழலைகளுக்கும், மாணவ மாணவிகளுக்கும் இயற்கை சார்ந்த விழிப்புணர்வாக பனைப் பொருட்கள் கண்காட்சி நேரடி செயல்வழித்திட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டது. இலவசமாக பனை ஓலை பொருட்களும் வழங்கப்பட்டது. இதற்கு மிக உறுதுணையாக நிறுவனத்தலைவர் அவர்களுடைய தந்தை மற்றும் குடும்பத்தார், உறவினர்கள் மற்றும் பொது மக்கள் ஆக்கமும் ஊக்கமும் தந்து திறம்பட செயல்படுத்திட வளர்ச்சியின் பாதையில் கொண்டு சென்றது. இப்படியாக அண்டை மாநிலமான கேரளாவில் நிறுவனத்தலைவர் தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணி புரிந்து வந்தார். அப்படியாக மழலைகளை கற்ப்பிக்கும் செயல் வழித்திட்ட முறையில் இவர் கைதேர்ந்தவர். இவர் பனைவிழா அப்பள்ளியில் நடத்த பள்ளி நிர்வாக ஒத்துழைப்போடு நடத்தினார் அது கேரளா மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் சிறப்பான அங்கீகாரம் பெற்றது. இப்படி மக்களின் பார்வையில் பனைமரத்தோடு பயணித்து வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தோடு அவர் பணிகளுக்கு அனைவரும் வித்திடத் தொடங்கினர். கொரோனா கால கட்டத்தில் இணையவழி பள்ளி கல்லூரி மாணவிகளுக்கு பனை சார்ந்த விழிப்புணர்வு கொரோனா

விழிப்புணர்வு நேரடியாக பொது மக்களிடையே சென்று முகக்கவசத்தின் முக்கியத்துவத்தையும் உணர்த்தி முகக்கவசம் வழங்குல் நிலவேம்பு கசாயம் வழங்குதல் பனைவிதை நடவு செய்தல் மரக்கன்று வழங்குதல் இயற்கை சார்ந்த உணவு முறைகளை மக்கள் பின்பற்ற வேண்டும் என்கிற விழிப்புணர்வுகளையும் வழங்கினார். இவருடைய சொந்த ஊர் நாகர்கோவில் இவர் தனியார் பள்ளி ஆசிரியர் பணி ஊதியத்தைக் கொண்டு இரவு பகல் பாராமல் பள்ளி கல்லூரி அங்கன்வாடி சமூக மக்களிடையே இல்லங்கள் தோறும் பொது நிகழ்வுகள் அரசியல் தலைவர்களை சந்தித்தும் மக்கள் பனைபொருட்களை பயன்படுத்த விழிப்புணர்வுகளை வழங்கி வருகிறார். இச்சேவையை கண்ட பொது மக்கள் 2021-ம் ஆண்டு இவருடைய அயராத உழைப்பின் காரணமாக அரசு பதிவெண் பெற்று தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம் பதிவெண் நம்பர் 36/2021 என்ற இயக்கத்தை குமரி தலைமையிடமாகக் கொண்டு நிறுவினார். இவருக்கு மக்களின் ஆதரவு இவரோடு பயணிக்க மிக சிறப்பான ஊன்று கோலாக அமைந்தது. இவர் பணிகளை பாராட்டி பனைமரத்தாரகை பனைமர விழிப்புணர்வு போராளி வீரமங்கை விருதுகளின் நாயகி சிங்கப்பெண் கொரோனா விழிப்புணர்வு போராளி என பல அமைப்புகள் சார்ந்த பல விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. இவருடைய ஆசிரியர் பணியிலும் செயல்வழி கற்ப்பித்தலில் அனேகமான விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. இவர் பதினேழு வருட ஆசிரியர் பணியின் மூலம் தான் இந்த சமூகப் பணியை செய்து வந்தார். தற்போது முழு நேரப் பணியாக 2024 முதல் இயக்கப் பணியை நடத்தி வருகிறார் இவர் குமரி மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் மாவட்டம் தோறும் பொறுப்பாளர்களை நியமித்து இயக்க நிர்வாகக் குழு ஆலோசகர்களும் சட்ட ஆலோசகர்களும் மாநில மாவட்ட பொறுப்பாளர்கள் ஒன்றிய தொகுதி பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் என தன் இயக்கத்தை விரிவுபடுத்தியுள்ளார்.

இணையம் வழியாக தன்னுடைய விழிப்புணர்வை இவர் வழங்கி வருகிறார். Whatsapp குழுக்கள் முகநூல் youtube பக்கங்கள் சேன்ல்கள் வழியாக மக்களுக்கு விழிப்புணர்வு வரும் விதமாக வழங்கி வருகிறார்.

காமராஜரின் தீவிர பக்தரென்று சொல்லாமல் இருக்க முடியாது காமராஜரின் புகழை பறைசாற்றும் விதமாக Whatsapp தளம் காமராஜர் இளைஞர் வளர்ச்சி பேரவை என்று காமராஜர் காலத்தில் ஆட்சிகளை பரப்புரை செய்தல் அது மட்டுமல்லாமல் காமராஜர் பிறந்த நாள் அன்று திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து

அவருடைய புகழையும் பள்ளிகளில் சென்று விழிப்புணர்வை மாணவர்களடையே பரப்பி வருகிறார் பரப்பி வருகிறார்.

உங்களுக்கு எப்படி பனைமரம் குறித்து விழிப்புணர்வு நடத்த வேண்டும் என்றும் காமராஜர் புகழை பரப்ப வேண்டும் என்ற ஆர்வம் எப்படி வந்தது என்று கேட்ட போது மனம் திறந்து நெகிழ்ச்சியான பேட்டிகளை பகிர்ந்தார். கடவுள் விருப்பம் இல்லாமல் ஒரு செயலில் நாமாக இறங்கவும் முடியாது என்பது என் நம்பிக்கை. பனை நண்பனும் அய்யா பெருந்தலைவருமே என்னை உலகுக்கு அறிமுகப்படுத்தினார்கள் என சொல்கிறார். என்னுள் இருந்த ஆர்வம் என்னை சிறுவயது முதலே என் பெற்றோர் பனை நண்பனுடன் பயணிக்க விட்டனர். என் குடும்பத்தினர் அரசியல் பற்றாளர்களும் என் தாயார் சிறுவயதிலிருந்தே அரசியல் பற்றாளரும் அய்யா காமராஜர் அவர்கள் என் தாயார் பிறந்த மண்ணிற்கு சென்ற போது மாலை அணிவித்து அவர்களை கவுரவப்படுத்திய நினைவலைகளையும் எங்களோடு பகிர்ந்து கொண்டு எங்களுக்கு காமாராஜருடைய ஆட்சி காலத்தை எங்களுக்கு ஊட்டியவர் எனது தாயார் என்று சொல்லலாம். அரசியல் பொறுப்புகள் எதிலும் இல்லை என்றாலும் தேர்தல் நேரங்களில் கட்சி சார்ந்த பணிகளுக்கு முழுவீச்சாக எங்கள் இல்லம் காரியாலயமாக மாற்றி கொடுத்து கட்சிப் பணிகளுக்கு முழுமையாக செயல்பட்டு வந்தார் எனது தந்தையார்.

அரசியல் தலைவர்கள் தேர்தல் காலகட்டங்கள் வரும் போது என் தந்தையின் பணியின் காரணமாக பல அரசியல் கட்சியை சார்ந்தவர்களை சிறுவயதிலிருந்தே கௌரவிக்கும் ஒரு அரசியல் சமூக சிந்தனையோடு எனக்கு வாய்ப்பு என் தந்தை வழங்கினார்.

**இயக்கத்தின் பணிகள் :**

1. அங்கன்வாடி பள்ளி, கல்லூரி, மாணவ மாணவிகளைக் கொண்டு பனைமர விழிப்புணர்வு பொது இடங்கள் மக்கள் அதிகமாகக் கூடும் திருவிழா நிகழ்ச்சிகளில் பனைஓலைத் தொப்பிகள் இலவசமாக வழங்குதல் பனைபொருட்கள் முக்கியத்துவத்தை குறித்த துண்டு பிரசுரங்கள் வழங்குதல் பொது மக்களைக் கொண்டு ஏரி குளம் கரை கடற்கரை ஓரங்கள் நிலத்தடி நீர் ஆதாரத்தை சேமிக்க பனைவிதை நடுதல் விவசாயநிலங்களின் வேலிப்பயிராக பனைமரத்தை நட மற்றும் விவசாகிகளின் பாதுகாப்பு அரணாக நிலத்தடி நீர் அவ்விடத்தில் சேமிக்கப்படும் என்பதை வலியுறுத்தி பனைவிதை நடவு செய்து வருகிறோம். நூறு நாட்கள் வேலையாட்கள் மற்றும் தூய்மை பணியாளர்களிடையே பனைமர விழிப்புணர்வு நடத்தி வருகிறோம். சிவாலய ஓட்டம் பக்தர்களுக்கு இயக்கம் சார்பாக பனை ஓலை விசிறி வழங்கி சமூக சேவையாக தண்ணீர் மற்றும் குளிநீர்

பானங்களும் வழங்கப்பட்டு வருகிறது. NSS நாட்டு நலத்திட்ட முகாம்களில் நேரடியாக சென்று பனைமர விழிப்புணர்வு புதுமனைபுகுவிழா திருமண நிகழ்வுகள் கோவில் கும்பாபிஷேக விழாக்கள் ஆலய நிகழ்வுகள் சமயவகுப்பு மாணவ மாணவிகள் திருச்சபை சார்ந்த வேதபாடசாலை மாணவ மாணவிகள் இப்படியாக மக்களிடையே சென்று பனைபொருட்கள் இலவசமாக வழங்கி பனைபொருட்களின் நன்மைகள் குறித்த பிரசுரகங்கள் வழங்கி பனைவிதை இலவசமாக வழங்கி வழிப்புணர்வில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்தித்து பனைமரத்தின் முக்கியத்துவத்தையும் மக்கள் கலப்படம் இல்லாமல் பனைபொருட்களை உபயோகப்படுத்த அரசு ஏற்று பனை சார்ந்த பொருட்களை நேரடி கொள்முதல் செய்து அரசு மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை மனுவை பனம்பால் என்பது அண்டை மாநிலங்களில் கடை இல்லாமல் மக்கள் உடல் நலத்திற்கு மருந்தாக இருக்கும் கள் விற்பனை செய்கிறது. ஏன் தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை அரசு நடைமுறையில் கொண்டு வர வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார் தமிழகம் மட்டுமல்லாமல் அண்டை மாநிலமான கேரளாவிலும் சென்று பனைமர விழிப்புணர்வு பள்ளி கூடங்களிலும் பொது இடங்களிலும் வழங்கி வருகிறார்.

சமூக சேவைகள் மருத்துவ முகாம்கள் ஒன்றியம் வாரியாக தொகுதிவாரியாக பொதுமமக்கள் அனைவரும் சேவை கிடைத்திட அகர்வால் மருத்துவமனை முகாமுடன் இணைந்து இலவச கண் மருத்துவ முகாம் நடத்தி வருகிறார். பத்தாம் வகுப்பு பன்னிரெண்டாம் வகுப்பு பொது தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறும் பொறுப்பாளர்களின் குழந்தைகளுக்கு பனை ஓலைத் தொப்பி வழங்கி கல்விக் கண் காமராஜர் விருதுகள் வழங்கி வருகின்றனர். நம் இயக்கத்தில் மாநில கலை மற்றும் பண்பாடு அணித் தலைவர் அவர்கள் புதல்வன் உலக சாதனையாளர் தீரஜ் என்ற மாணவன் பனைமரம் குறித்த விழிப்புண்வு பாடல் பாடியதை பாராட்டி இயக்கம் சார்பாக விருது வழங்கப்பட்டது.

பசுமைவாசல் பவுண்டேசன் மற்றும் தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கமும் இணைந்து இணையம் வழி காமராஜர் பிறந்த தினத்தை முன்னிட்டு ஆசிரியர்கள் சமூகஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், காவல்துறை இதில் சிறந்து விளங்குபவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. இப்படியாக இவர்களுடன் இணைந்து பல விருதுகள் வழங்கப்பட்டது.

பேரிடர் மேலாண்மை குழு ஒன்று இயக்கத்தில் செயல்பட்டு வருகிறது. பேரிடர் காலங்களில் மக்களுக்கு தன்னார்வ தொண்டுடன் உதவிகள் நேரடியாக சென்று இயக்கம் சார்பாக செயல்பட்டு வருகிறது. 50,000-த்திற்க்கு மேற்ப்பட்ட பனை விதைகள் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. ஏரி குளங்கள் இல்லங்கள் தோறும் 50,000 பனை விதைகள் இலவசமாக நடவு செய்யப்பட்டது.

சென்னையிலுள்ள பனைபொருட்கள் பயிற்சி பட்டறைக்கு இலவச ஊக்கத்தொகையுடன் அரசு வழங்கும் சலுகைகளைப் பெற்று பயிற்ச்சிக்கு சென்று வழிகாட்டப்படுகிறது. இதில் நம் இயக்கம் சார்பாக ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த ஒருவர் பயிற்சி பெற்றார். சாலை ஓரம் பனைத் தொழில் வியாபாரம் செய்பவர்கள் மற்றும் பனைத் தொழிலாளர்கள் இவர்களை நேரடியாக சந்தித்து அவர்களிடம் அவர்கள் குறைகளை கேட்டறிந்து அவர்களை உற்சாகப்படுத்தும் விதமாக பனை ஓலைத் தொப்பி அணிவித்து அவர்களிடம் நேரடியாக பேட்டி கண்டும் வீடியோக்கள் எடுத்தும் பகிர்ந்து வருகிறார்.

இயக்கத்தில் உள்ள மகளிருக்கு சுய உதவி குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு மகளிர் மேம்பாட்டிற்காக பல பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. நம் கையில்தான் விழிப்புணர்வு உள்ளது நாம் அனைவரும் முன்னெடுத்தால் தான் பயணிக்க வேண்டும். மீனவ மக்களிடையே நேரடியாக சென்று பனை பயன்பாடு புயலின் சீற்றத்தை கட்டுப்படுத்த பனைவிதை நடவு செய்ய வேண்டும் பனைமரங்களை வெட்டக் கூடாது என்ற விழிப்புணர்வை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 62000-த்திற்க்கும் மேற்ப்பட்ட உறுப்பினர்களை கொண்டு இவ்வியக்கம் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகிறது.

**“வாழ்வியலோடு ஒன்றிணைந்த பனைமரம் பார்ப்போம் வாங்க!”**

பனைமரம் பதனீர், நொங்கு, பனங்கற்கண்டு, கருப்பட்டி, பனம்பழம், பனங்கிழங்கு, தவிண், பனைஓலை, பனைமட்டை, பனைநார், தும்பு, இவைகள் அனைத்துமே நமக்கு பயன் உள்ளது. திருமண வீடுகளில் பனைஓலைப் பொருட்கள் பாய் அரிபெட்டி கடவம்........ பயன்படுத்தப்படுகின்றனர். அலங்கார வளைவு உலத்தி மரம் பனைஓலை சுவடி பண்டைகால ஆட்சி முறைகள் ஜாதகங்கள் இவற்றை தந்தது பனைஓலை தமழனின் அடையாளம் பனை ஓலை என்றே சொல்லாம் பனை சார்ந்த பாரம்பரிய விளையாட்டு நொங்கு வண்டி, பனைஓலை காற்றாடி, திருக்கார்த்திகை பனைஓலை கொழுக்கட்டை ஓணம் பண்டிகை பனைஓலைக் குடை கிறிஸ்துமஸ் பனை ஓலை ஸ்டார், பனைஓலையால் செய்யப்பட்ட பூக்கூடை மணமாலை, மாவொளி சுத்துதல், பனம் பூ எடுத்து தீபாவளிப்

பண்டிகைக்கு பயன்படுத்துகின்றனர். அக்னி நட்சத்திரத்திற்கு நமக்கு இயற்கை அரணாக பனைஓலைக் கூரைகள் பயன்படுத்துகின்றனர். காக்கட்டை, தோண்டி நமக்கு உடற்பயிற்சியாக இருந்தது நாம் அதை மறந்து விட்டோம் பனை நார் கட்டில் பனை நார் செருப்பு, நொங்கு வண்டி விளையாட்டும் குழந்தைகள் பயன்படுத்துகின்றனர்.

**பனைவிதை நடவு:**

நிலத்தடி நீர் சேமிப்பு கடற்கரை ஓரம் ஏரி குளம் கரை பனைவிதை விதைப்போம் நாம் விதைக்க அது தானாகவே முளைத்து வளரும். நாம் பராமரிக்க வேண்டிய தேவை இல்லை.

**அனைவரும் பனைமரத்தோடு பயணிக்கிறார்கள் பார்ப்போமா!**

பத்திரகாளி அம்மன் தலைவிரிச்சகம் பனைமரம் கிறிஸ்தவர்களின் வேதாகமத்தில் நீதிமான் பனையைப் போல் செழிப்பான் என்று பார்க்க முடிகிறது. பல தேவாலயங்களின் முன் பனைமரம் நிற்பதை பார்க்க முடியும். மீன்பிடி தொழிலாளர்கள் பனைஓலை தொப்பி அணிந்து மீன் வியாபாரிகள் பனைலை பெட்டியை காசுப்பெட்டி பயன்படுத்துகின்றாகள். வீட்டுத் தோட்டத்தில் விசிறிப்பனை நடுவோம் மண்டைக்காடு பகவதி அம்மன் ஆலயத்தில் பனைஓலை பட்டை சாப்பாடு கொடுக்கிறார்கள். சீர்வரிசை பனைநார் பெட்டியில் கொடுக்கிறார்கள். அன்னம் கொடுப்பதற்காக தர்மம் எடுக்க வீடு விடாக வரும் பொழுது அவர்கள் கையில் இருப்பது பனைநார் பெட்டி தன் பார்த்திருக்கிறீர்களா! சிவாயல ஓட்டத்தின் போது பக்தர்கள் கையில் இருப்பது பனைஓலை விசிறி திருவிழாக்கடைகளில் மிட்டாய் விற்பதற்காக அவர்கள் வைத்திருப்பது பனைஓலைப் பெட்டி. பனை தன் வாழ்நாளை முடித்த போது கழிக்கோலாகவும் தூண்களாகவும் உத்திரங்களாகவும் பயன்படுதுகின்றனர். இதில் பரிசுப் பொருட்களும் செய்கின்றனர். பனை ஓலையில் அணிகலன்கள் கைப்பை தோள்பையை கல்லூரி மாணவிகள் அதிகமாக விரும்பி பயன்படுத்துகின்றனர். திருமணத்தின் போது விசிட்டிங் கார்டு அடித்து கொடுக்கிறார்கள் பனைஓலையில் தான் நாம் அதை பார்க்க முடிகிறது. உங்கள் குழந்தைகள் பனை உணவுப் பொருட்களை நேரடியாக பயன்படுத்தவில்லை என்றால் அதை மதிப்புக்கூட்டு பொருட்களாக வருகிறது அதை வாங்கி கொடுக்கலாமே (பனங்கிழங்கு மிட்டாய், பனங்கிழங்கு அல்வா, கருப்பட்டி அல்வா)

கள் என்பது பனம்பால் மருத்துவ குணம் உடையது உடல் ஆரோக்கியத்தை பயன்படுத்தக் கூடிய அரும்மருந்து என்று சொல்லலாம். இப்படிபட்ட பனைமரத்தை நாம் ஏன் பதுகாக்கக் கூடாது ஏன் பயன்படுத்தக்கூடாது சநந்திப்பீர்!.

ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிட்ட பனையிலிருந்து தயாரிக்கும் பனைவெல்லத்தோடு ஒப்பிடுகையில் அதே பரப்பில் பயிரிடும் கரும்பிலிருந்து கிடைக்கும் வெல்லத்தின் மதிப்பீடு குறைவு.

ஒரு முறை விதைத்தால் பத்து ஆண்டுகளில் இருந்து ஒரு நூற்றாண்டு வரை பயன்தரக்கூடியது பனை பனையிலிருந்து கிடைக்கக்கூடிய பொருட்களால் மனித வாழ்வை தன்னிறைவு ஆக்கும் பனை இப்படிப்பட்ட பனையின் பயன்களை இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம். பனைமரம் காப்போம்! விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்! பனைமரத்தோடு பயணிப்போம் வாழ்வை மேம்படுத்துவோம்!. என்று இயக்க மக்களும் பனை ஆர்வலர்களும் ஆரல் கொடுத்து இயக்கத்தையும் இயக்க பணிகளையும் நிறுவனருடன் இணைந்து திறம்பட செயலாற்றி வருகின்றனர்.

**இயக்கம் அரசுக்கு வைக்கும் கோரிக்கைகள்**

1. பனைபொருட்கள் அனைத்தும் அரசு கொள்முதல் செய்து விற்பனை செய்தால் கலப்படம் உருவாக வாய்ப்பு இல்லை. பனைபொருட்களுக்கும் இடங்களுக்கும் இடம் மாறுபட்டு வலை ஏற்றம் இறக்கம் உள்ளதாக உள்ள நிலை மாற அரசு வலை நிர்ணயம் செய்யலாம்.
2. நாடு முழுவதும் பனை பொருட்கள் விற்பனை செய்ய சந்தை முறைபடுத்துதல் பனைப்பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னிய செலவாணியை உயர்த்த திட்டமிடல்.
3. பனை தொழிலாளிகளுக்கு ஓய்வூதிய திட்டங்கள் நிதி உதவி வழங்குதல்.
4. பனையேறும் தொழிலாளிகள் பணியின் போது தவறி விழுந்தால் தொழிலாளியின் மருத்துவ சிகிட்சை அரசு வழங்கவும் உயிரிழந்தால் அரசு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்காக நிதியுதவி வழங்க வேண்டும்.
5. பனைமரம் ஏறுவதற்கான இயந்திரங்களை அரசு வேளாண்மை பொறியல் துறை உருவாக்க வேண்டும். பனையேறும் தொழிலாளிக்கு மானிய விலையில் விற்பனை செய்ய வேண்டும்.
6. மரபு மாற்று முறையில் நெட்டை மற்றும் குட்டை பனைமரங்களை உருவாக்க தமிழ்நாடு விவசாயதுறை முன்வர வேண்டும்.
7. நீர் நிலைகளை பாதுகாக்க, நீர் ஆதாரம் பெருக செய்ய மண் வளம் பாதுகாக்க கடற்கரை ஓர புயல் சீற்றங்களிலிருந்து மக்களை காக்க பனைமரங்கள் நடுவதை அரசு ஏற்று நடத்த வேண்டும்.

8. பனைவிழா தமிழக அரசு வழாவாக கொண்டாடப்பட்டு அன்று போட்டிகள் நடத்தப்பட்டு பனை ஓலை பொருட்கள் பரிசாக வழங்கப்பட வேண்டும்.

9. அரசு அலுவலகங்கள் கனியார் துறை எங்கும் குறைந்தது இரு பனைமரமாவது வளர்க்க ஆணை பிறப்பிக்க வேண்டும்.

10. கள் அண்டை மாநிலங்களில் மருத்துவ குணமுடையது என்பதை கருத்தில் கொண்டு அரசாங்கமே ஏற்று மக்கள் நலன் கருதி உடலுக்கு தீங்கு விளைவிக்காத பொருள் என்பதால் விற்பனை செய்கிறது. ஏன் நம் அரசாங்கம் கள்ளுக்கு தடை விதிக்கிறது? பனை தொழிலாளர்களின் வாழ்வு மேம்பட கள் தடையை நீக்கலாமே?

    வெளிநாடு அண்டை மாநிலங்களில் உள்ளது போல் பனைமரம் அழிக்கப்படாமல் காக்கப்பட வேண்டும்.